# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAMALAR DATED 23.04.2025

# கல்லூரி மாணவர்கள் இடையே கபடி போட்டி துவங்கியது

**புதுச்சேரி, ஏப். 23–**

புதுச்சேரி பல்கலைக் கழக சமுதாய கல்லூரி சார்பில், கல்லூரி மாணவர்களுக்கு இடையிலான இரண்டு நாட்கள் நடக்கும் கபடி போட்டி, உப்பளம் ராஜிவ் காந்தி உள் விளையாட்டு மைதானத்தில் நேற்று துவங்கியது.

இதில், ஆண்கள், பெண்கள் என 20க்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்கின்றன. இது புதுச்சேரியில் நடக்கும் முதல் போட்டியாகும்.

சிறப்பு விருந்தினர்களாக பல்கலைக்கழக துணை வேந்தர் பிரகாஷ் பாபு, அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., ஆகியோர் பங்கேற்று துவக்கி வைத்தனர். சமுதாய கல்லூரி முதல்வர் லலிதா வரவேற்றார். தொடர்ந்து, உயிரிழந்த போப் பிரான்சிசிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

பல்கலை துணை வேந்தர் பேசுகையில், 'காரைக்கால், ஏனாம், லட்சத்தீவுகளில் சமுதாய கல்லூரிகளை தொடங்கி நாட்டின் புறப்பகுதியில் வளர்ச்சியடைய கூடுதல் படிப்புகளை சேர்க்க வேண்டியதன் அவசியம் பற்றி குறிப்பிட்டார்.

எம்.எல்.ஏ., பேசுகையில், 'புதுச்சேரி மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் எல்லா நேரங்களிலும், ஆதரவு அளிப்பதாக கூறினார்.

நிகழ்ச்சியில், உடற்கல்வி மற்றும் யோகா துறை பேராசிரியர் முருகேசன், அமைப்பு செயலாளர் ஜெகதீஷ்வரி, உதவி பேராசிரியர் இந்துமதி உட்பட பலர் கலந்து கொண்டனர். இப்போட்டி, இரண்டாவது நாளாக இன்றும் நடக்கிறது.



■ சமுதாயக் கல்லூரி சார்பில், முதல்வர் சுழற் கோப்பை கபடி போட்டியில் சமுதாயக் கல்லூரி மாணவர்கள் அணி, மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மாணவர்கள் அணி மோதின.

DINAMANI DATED 23.04.2025

## முதல்வர் கோப்பைக்கான கபடி போட்டி தொடக்கம்

புதுச்சேரி, ஏப். 22: புதுவை மாநிலத்தில் முதல்வர் கோப்பைக்கான கல்லூரி மாணவர்களுக்கான கபடிப் போட்டி செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

மாநில அளவிலான இந்தப் கபடி போட்டியில் 200 க்கும் மேற்பட்ட வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்றனர். புதுவை சமுதாய கல்லூரி மற்றும் கபடி சங்கம் இணைந்து இந்தப் போட்டிகளை நடத்துகின்றன. புதுச்சேரி நகர் உப்பளம் ராஜீவ் காந்தி உள்விளையாட்டு அரங்கில் இரு நாள்கள் (செவ்வாய், புதன்) நடைபெறும் இந்தப் போட்டிகளை திமுக எம்எல்ஏ அனிபால் கென்னடி, புதுவை மத்திய பல்கலைக்கழகத் துணைவேந்தர் பிரகாஷ் பாபு ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

போட்டியில் புதுச்சேரி அரசு மற்றும் தனியார் கல்லூரிகளைச் சேர்ந்த 20 அணிகள் பங்கேற்றுள்ளன. மேலும் இதில் சிறந்த வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு தேசிய அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பர் என கூறப்படுகிறது. போட்டிகளில் வென்றவர்களுக்கு புதன்கிழமை (ஏப். 23) பரிசளிக்கப் படுகிறது.

DAILY THANTHI DATED 23.04.2025



உப்பளம் விளையாட்டு அரங்கில்

## கல்லூரிகளுக்கு இடையே கபடி போட்டி

புதுச்சேரி, ஏப்.23-

புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரி சார்பில் கல்லூரிகளுக்கு இடையேயான முதல்-அமைச்சர் கோப்பைக்கான கபடி போட்டி உப்பளம் ராஜீவ்காந்தி உள்விளையாட்டு அரங்கில் நடக்கிறது. இந்த போட்டியை பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபு தலைமையில் அனிபால் கென்னடி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

போட்டிகளில் 10 ஆண்கள் அணிகளும், 9 பெண்கள் அணிகளும் கலந்து கொண்டுள்ளன. சமுதாய கல்லூரி அணியும், காரைக்கால் அறிஞர் அண்ணா கல்லூரியும் மோதிய போட்டியில் 32-12 என்ற புள்ளிக்கணக்கில் சமுதாய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடந்த போட்டிகளிலும் சமுதாய கல்லூரி அணி வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது. இதே போல் தாகூர் கலைக்கல்லூரி அணியும் அதிக வெற்றிகளை பெற்று அரையிறுத்திக்கு தகுதி பெற்றது. இன்று (புதன்கிழமை) இறுதிப்போட்டி நடக்கிறது.

THE HINDU TAMIL DATED 23.04.2025

# உப்பளம் மைதானத்தில் முதல்வர் கோப்பைக்கான கபடி போட்டி தொடக்கம்

**புதுச்சேரி**

புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரி மற்றும் புதுச்சேரி கபடி சங்கம் சார்பில் கல்லூரி மாணவர்களுக்கு இடையேயான மாநில அளவிலான முதல்வர் கோப்பைக்கான கபடி போட்டி உப்பளம் ராஜீவ் காந்தி உள்விளையாட்டு அரங்கில் நேற்று தொடங்கியது.

மாநில அளவிலான கபடி போட்டியை எம்எல்ஏ அனிபால் கென்னடி மற்றும் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபு ஆகியோர் தொடங்கி வைத்து, விளையாட்டு வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

இப்போட்டியில் புதுச்சேரியில் உள்ள அரசு மற்றும் தனியார் கல்லூரிகளைச் சேர்ந்த 20 அணிகளில் இருந்து, சுமார் 200-க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இதில் சிறந்த வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு தேசிய அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பார்கள் என்று விளையாட்டு அதிகாரிகள் தரப்பில் குறிப்பிட்டனர். நேற்று தொடங்கிய இப்போட்டி இன்று வரை நடைபெறுகிறது.



புதுச்சேரியில் கல்லூரி மாணவர்களுக்கு இடையே நடைபெற்று வரும் மாநில அளவிலான முதல்வர் கோப்பைக்கான கபடி போட்டியில் ஆர்வத்தோடு பங்கேற்ற மாணவர்கள். படம்: எம்.சாம்ராஜ்